**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10022025-9818

Volume: 10

Issue: 2

Month: October

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 09.09.2025

Accepted: 28.09.2025

Published: 01.10.2025

Citation:
Sifkan, M. H. M., & Banu, N. (2025). Sociology of Religion and Cultural Practices During Ramadan: A Sociological Study Focusing on East Sri Lankan Muslims. *Shanlax International Journal of Tamil Research, 10*(2), 47–60.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i2.9818

*Corresponding Author:
mhmsifkan@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Sociology of Religion and Cultural Practices During Ramadan: A Sociological Study Focusing on East Sri Lankan Muslims

**Mohamed Hanifa Mohamed Sifkan**
*Department of Islamic Studies, FIA*
*South Eastern University of Sri Lanka*

**M. Nusrath Banu**
*Department of Sociology (TGU), FAC*
*South Eastern University of Sri Lanka*
*http://orcid.org/0009-0006-2518-5998*

**Abstract**

*Sociology of Religion is a branch of sociology that examines the relationship between society and religion. In East Sri Lanka, Islam is the predominant religion, with Muslims forming the majority of the population. The Muslim community in this region has developed a distinct set of cultural practices that are widely observed during the Holy month of Ramadan. This study seeks to explore why the observance of cultural rituals and social practices associated with Ramadan is more pronounced during this particular period, and how these practices contribute to the social dynamics of East Sri Lankan Muslims. So the primary aim of this research is to investigate the cultural practices surrounding Ramadan, among East Sri Lankan Muslims. This qualitative study uses case study approach to collect data. Primary data was gathered through interviews, direct observations, and focus group discussions, while secondary data was sourced from documentaries, research articles, books, and magazines. The data was analysed using Ms Word. The findings of this study reveal that 14 distinct cultural events, including house washing, painting, night prayers, ihthikaf, special prayers on Lailatul Qadr, and the preparation of traditional foods, are commonly practiced by East Sri Lankan Muslims during Ramadan. This study highlights the sociological significance of these cultural events and strengthens the theoretical concepts within the field of sociology. This research contributes to the understanding of how religious observances and cultural practices during Ramadan shape the social fabric of the Muslim community in East Sri Lanka, offering valuable insights into the intersection of religion, culture, and society.*

***Keywords:*** *Sociology of Religion, Culture, Muslims, Ramadan, Tradition.*

## References

1. Abu Dawood. (1984). Sunan Abu Dawood (Hadith No. 2355). Dar Al-Risalah Al-Alamiyah.
2. Ahmad, A. (1999). Musnad Ahmad (Hadith No. 6626). Mu'assasat al-Risalah.
3. Al-Bukhari, M. I. (1957). Sahih al-Bukhari (Hadith No. 1957). Dar Ibn Kathir.
4. Al-Ghazali. (2015). Ihya Ulum al-Din. Dar al-Kutub al-Ilmiyyah.
5. Al-Hakim, M. (1990). Al-Mustadrak 'ala al-Sahihayn (Hadith No. 2085). Dar al-Kutub al-Ilmiyya.

6. Al-Qur’an. (2004). Translation of the meanings of the Noble Qur’an in the English language. King Fahd Complex for the Printing of the Holy Qur’an.
7. Al-Qur’an. (n.d.). Surah Al-Qadr (97:1).
8. Al-Qurtubi. (2003). Tafsir al-Qurtubi. Dar al-Kutub al-Misriyyah.
9. An-Nawawi. (1996). Riyadh as-Salihin. Darussalam.
10. At-Tirmidhi, A. I. (1975). Jami’ At-Tirmidhi (Hadith No. 2910). Dar Ihya al-Turath al-Arabi.
11. At-Tirmidhi, M. I. (1975). Sunan at-Tirmidhi (Hadith Nos. 695, 807). Dar Al-Kutub Al-Ilmiyyah.
12. Bukhari, M. I. (2008). Sahih al-Bukhari. Darussalam Publishers.
13. Dr. Nusair . etPd kUj;Jtj;jpy; rpfpr;ir KiwahFk; Nehd;G. Vidivelli.lk, 22 Feb. 2025, www.vidivelli.lk/article/18620. Accessed 23 Mar. 2025.
14. Ibn Hajar al-Asqalani. (1998). Tabyin al Ajab bima warada fi Rajab (p. 19). Dar al-Basha’ir al-Islamiyyah.
15. Ibn Khuzaymah, M. I. (1993). Sahih Ibn Khuzaymah (Hadith No. 1887). Al-Maktab Al-Islami.
16. Ibn Majah, M. Y. (2007). Sunan Ibn Majah (Hadith No. 1746). Dar Al-Risalah Al-Alamiyah.
17. Ibrahim, S. (2017). Ramadan: A time for reflection and spiritual growth. Islamic Studies Journal, 35(2), 78-84.
18. Jafar, A. (2019). The importance of Ramadan in the life of a Muslim. International Journal of Islamic Thought, 7(1), 22-30.
19. Kamali, M. H. (2008). The Islamic Law of Zakat and Fasting. Islamic Foundation.
20. Muslim, M. H. (2001). Sahih Muslim (Hadith No. 1098). Dar Ihya Al-Turath Al-Arabi.
21. Muslim, M. H. (2001). Sahih Muslim (Hadith No. 2308). Dar Ihya Al-Turath Al-Arabi.
22. Saeed, A. (2015). Islamic Fundamentalism: A Socio-Political Analysis. Oxford University Press.

# சமயச் சமூகவியலும் ரமழான் கால கலாச்சார நடைமுறைகளும்: கிழக்கிலங்கை முஸ்லிம்களை மையப்படுத்திய ஒரு சமூகவியல் ஆய்வு

***முகம்மது ஹனீபா முகம்மது சிஃப்கான்***
இஸ்லாமிய ஆய்வுகள் துறை, FIA
தென்கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை

**M. *நஸ்ரத் பானு***
சமூகவியல் துறை (TGU), FAC
தென்கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***

*சமயச்சமூகவியல் என்பது சமூகத்திற்கும் சமயத்திற்கும் இடையிலான உறவை ஆய்வுசெய்யும் சமூகவியலின் கிளை அம்சமாகும். கிழக்கிலங்கையைப் பொறுத்தவரையில் இஸ்லாம் பிரதான சமயமாக காணப்படுவதுடன் முஸ்லிம்கள் பெரும்பான்மை சமூகமாகவும் காணப்படுகின்றனர். இஸ்லாமிய புனித மாதங்களில் ஒன்றாகக் கருதப்படும் ரமழான் மாதத்தில் பல்வேறுபட்ட நிகழ்வுகளை மிகவும் விரும்பி மக்களால் ஏற்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் கலாசாரம் காணப்படுகிறது. கிழக்கிலங்கை முஸ்லிம்கள் பெரும்பாலும் சமயத்தை அடிப்படையாகக் கொண்ட கலாசார நிகழ்வுகள், பெருநாள்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுகின்றபோதிலும் ஏன் ரமழான் காலத்தில் மாத்திரம் மிகவும் அதிகமான பிரயத்தனங்களையும் பல்வேறு விதமான கலாசார நிகழ்வுகளையும் மேற்கொண்டு சாதாரணமாக நிகழ்ந்து கொண்டிருக்கின்ற சமூகத்தில் ஏன் ஒரு தீடீர் சமூக அசைவை ஏற்படுத்துகின்றனர் என்பதைக் கண்டறிவதே இவ்வாய்வினுடய பிரச்சினையாகும். பண்புரீதியாக அமைந்த இவ்வாய்வு நோக்கமாதிரியை அடிப்படையாகக் கொண்டு தகவல்களைத் திரட்டியிருக்கிறது. முதலாம் நிலைத்தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக நேர்காணல், நேரடி அவதானம், இலக்குக்குழு கலந்துரையாடல் போன்ற உத்திகளைப் பயன்படுத்தியுள்ளதுடன், இரண்டாம் நிலைத்தரவுகள் எழுதித் தொகுக்கப்பட்ட ஆவணங்கள், ஆய்வுக்கட்டுரைகள், புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன. இவ்வாய்வுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின்படி வீடு கழுவுதல், வர்ணம் பூசுதல், இரா வணக்கம், இறுதிப்பத்தும் இஃதிகாபும், லைலதுல் கத்ர் விஷேட வழிபாடுகள் மற்றும் கலாசார உணவு தயாரித்தல் முதலிய 14 வகையான கலாசார நிகழ்வுகள் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் மத்தியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளது. எனவே சமூகவியல் ஆய்வுப்பரப்பில் சமயச்சமூகவியல் எண்ணக்கருக்களில் இவ்வாய்வு வலுச்சேர்ப்பதாக அமைகிறது.*

***திறவுச் சொற்கள்:*** *சமயச் சமூகவியல், கலாசாரம், முஸ்லிம்கள், ரமழான், பண்பாடு, இஸ்லாம்*

**ஆய்வுப்பின்னணி**

இஸ்லாமிய உலகம் சந்திரக்கணக்கை அடிப்படையாகக் கொண்ட ஹிஜ்ரி நாட்காட்டியை பயன்படுத்துகிறது. இந்நாட்காட்டியில் ஒவ்வொரு மாதமும் 29 அல்லது 30 நாட்களை கொண்டதாக காணப்படுகிறது. இஸ்லாமிய முறையில் பண்டிகைகள் மற்றும் சமய நிகழ்வுகளை நிர்ணயிப்பதற்காக இந்த நாட்காட்டி பரவலாக பயன்படுகிறது (Al Qur'an 2004).

இந்த நாட்காட்டி முஹர்ரம், ஸபர், ரபீஉல் அவ்வல், ரபிஉத் தானி, ஜுமாதல் அவ்வல், ஜுமாதல் தானி, ரஜப், ஷஃபான், ரமழான், ஷவ்வால், துல்கஃதா மற்றும் துல்ஹிஜ்ஜா என்ற பன்னிரண்டு மாதங்களை உள்ளடக்கியது. இம்மாதங்களில்ரமழான், இஸ்லாமியர்களின் மூன்றாவது கடமையான நோன்பு கடைப்பிடிக்கப்படும் சிறப்பான மாதமாக விளங்குகிறது. இம்மாதத்தில், முஸ்லிம்கள் இறை அன்பையும் அருளையும், பாவமன்னிப்பையும் பெறும் நோக்கில் நோன்பு அனுஷ்டிக்கின்றனர். இந்நோன்பு அதிகாலையில் தொடங்கி, உணவு மற்றும் பானம் உட்கொள்ளாமல் தங்களது விருப்பங்களை கட்டுப்படுத்தும் ஆன்மிகச்செயலாகும் (Kamali, 2008 இந்த நோன்பு, மாலை சூரியன் மறையும் நேரத்தில் முடிவடைகிறது. இறைவனை நினைவு கூறுதல், புனித குர்ஆனை பாராயணம் செய்தல் மற்றும் பள்ளிவாசலில் இஃதிகாப் (தியானத்தில்) இருத்தல் போன்ற ஆன்மிக செயற்பாடுகள் இக்காலங்களில் மேற்கொள்ளப்படுகின்றன (Ibrahim, 2017).

இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களான அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னா ரமழான் மாதத்திற்குரிய நோன்பின் சிறப்புகள் பற்றி விரிவாக எடுத்துக்கூறுகின்றன.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِينَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُونَ

ஈமான் கொண்டோரே! நீங்கள் இறையச்சமுடையவராக ஆகுவதற்காக உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டது போல, உங்கள் மீதும்(அது) கடமையாக்கப் பட்டுள்ளது (அல்பகரா, 183). இந்த வசனத்தின் அடிப்படையில், நோன்பு கடமையாக்கப்பட்டதன் முக்கிய நோக்கம் தக்வாவை வளர்ப்பதாகும் (Al Qurtubi, 2003).

ஹதீஸுல் குத்ஸியில் அல்லாஹ் கூறுகின்றான் "மனிதனின் ஒவ்வொரு செயலும் அவனுக்கு உரியது. ஆனால் நோன்பு மட்டும் எனக்கே உரியது, அதற்கு நானே கூலிகொடுப்பேன்" (Sahih al-Bukhari, 1904). இந்த ஹதீஸின் விளக்கமாக இமாம் Nawawi (1996) கூறுகிறார், நோன்பு அல்லாஹ்வின் விசேடமான கூலியை பெற்றுத்தரக்கூடிய வழிபாடு என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. மேலும் ரமழான் மாதம் ஒரு மனிதனின் ஆன்மீக முன்னேற்றத்திற்கான முக்கிய வாய்ப்பாகும். நோன்பு, ஒருவரது மனக் கட்டுப்பாட்டை மேம்படுத்துவதோடு, சுய பரிசோதனைக்கான ஒரு சிறப்பான சூழலை ஏற்படுத்துகிறது (Al Ghazali, 2015) இவ்வாறாக, ரமழான் மாதம் முழுவதும் பசி, தாகம் மற்றும் இறைபக்தியுடன் இறைவனின் பேரருளைப் பெறும் நோக்கில் ரமழான் மாதம் ஆரம்பமாவதற்கு முன்னதாகவே முஸ்லிம்கள் அதனை வரவேற்கத் தயாராகின்றனர். நபி(ஸல்) அவர்கள் ஷஃபான் மாதம் தொடங்கியதிலிருந்தே, ரமழான் மாதத்தை அடையக்கூடிய பாக்கியம் வேண்டி அதிகமான பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளார்கள் (Al Bayhaqi, A. I. (2003). Shu'ab al-Iman (Vol. 3, p. 375). இவ்வாறு முஸ்லிம்கள் ரமழான் மாதத்தை வரவேற்க தயாராகிக் கொள்கிறார்கள்.

முஸ்லிம் சமூகத்தின் இச்செயற்பாடு சமூகவியலுடன் தொடர்புடையதாக காணப்படுகின்றது. சமூகவியல் என்பது மனித சமூகத்தைப் பற்றிய ஆய்வாகும். இது சமூக அமைப்புகள், சமூக உறவுகள், மற்றும் சமூக நடத்தை ஆகியவற்றை ஆராய்கிறது. ஆகஸ்ட் கோம்ட் என்பவர் சமூகவியலின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். சமயமும் இதில் தொடர்புபடுவதனால் சமயச்சமூகவியல் பற்றிய புரிந்துணர்வும் எமக்கு அவசியமாகிறது. அந்தவகையில், சமயச்சமூகவியல் (Sociology of Religion) என்பது சமூகம் மற்றும் மதத்திற்கு இடையிலான உறவை ஆய்வு செய்யும் சமூகவியலின்

ஒரு கிளை ஆகும். இது மதத்தின் சமூக விளைவுகள், மத நிறுவனங்களின் பங்கு, மற்றும் சமூக மாற்றத்தில் மதத்தின் தாக்கம் போன்றவற்றை ஆராய்கிறது. கிழக்கிலங்கை முஸ்லிம்களின் ரமழானை வரவேற்கும் செயற்பாடும் இப்பரப்பினூடாக நோக்கப்படுகிறது.

ரமழான் மாதத்தை வரவேற்பதென்பது ஒரு பெரும் விழாவாக இல்லாது, அல்லாஹ்வின் அருளைப் பெறுவதற்கான ஒரு ஆன்மீக முயற்சியாகவும், பரஸ்பர அன்பை பகிர்ந்துகொள்ளவும், சமூகத்தில் உள்ளவர்களுக்கு உதவி செய்வதற்காள ஒரு வாய்ப்பாகவும் திகழ்கிறது (Jafar, 2019). ரமழான் மாதத்தினை வரவேற்கும் போது, குடும்பங்கள், அயலவர்கள் மற்றும் சமூகங்கள் ஒன்றிணைதல், கூட்டு பிரார்த்தனைகள் போன்ற செயல்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் இம்மாதத்தை சிறப்பிக்கும் நடைமுறை காணப்படுகிறது (Bukhari, 2008). இத்தகைய செயல்பாடுகள், ரமழான் மாதத்தின் இலட்சியங்களை வெற்றிகரமாக அடைவதற்கான ஆரம்பமாகும் (Saed, 2015). இந்நிலையில், கிழக்கிலங்கையில் பெரும் பான்மையாக உள்ள முஸ்லிம் சமூகத்தினர், ரமழான் மாதத்தை வரவேற்கும் விதமாக மேற்கொள்ளும் நிகழ்வுகள் மற்றும் வழக்கங்களைப் பற்றி பகுப்பாய்வு செய்வது அவசியமாகின்றது. எனவே, இவ்வாய்வு கிழக்கிலங்கை முஸ்லிம்களின் ரமழான் கால கலாசார நிகழ்வுகளை கண்டறிவதை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## ஆய்வுப் பிரச்சினை

இவ்வாய்வின் பிரச்சினை யாதெனில் கிழக்கிலங்கை முஸ்லிம்கள் பெரும்பாலும் சமயத்தை அடிப்படையாகக் கொண்ட கலாசார நிகழ்வுகள், பெருநாள்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுகின்ற போதிலும் ஏன் ரமழான் காலத்தில் மாத்திரம் மிகவும் அதிகமான பிரயத்தனங்களையும் பல்வேறு விதமான கலாசார நிகழ்வுகளையும் மேற்கொண்டு சாதாரணமாக நிகழ்ந்து கொண்டிருக்கின்ற சமூகத்தில் ஒரு திடீர் சமூக அசைவு மாற்றமும் ஏற்படுவதனைக் கண்டறிவது சமூகவியல் ஆய்வுப்பரப்பில் ஒரு அவசியமான விடயமாகும். எனவே, இதுவே இவ்வாய்வினுடைய பிரச்சினையாகும்.

## ஆய்வு வினாக்கள்

1. கிழக்கிலங்கை முஸ்லிம்கள் ரமழான் காலத்தை எதிர்நோக்குவதற்கு முன்பு எவ்வகையானகலாசாரஅனுஷ்டானங்களை மேற்கொள்கின்றார்கள்?
2. ரமழான் காலத்தில் எவ்வகையான கலாசார நிகழ்வுகள் அம்மக்களால் மேற்கொள்ளப்படுகின்றது?
3. லைலதுல் கத்ர் இரவினுடைய சிறப்புக்கள் கிழக்கிலங்கை முஸ்லிம்களிடையே எவ்வாறு கலாசார ரீதியாக காணப்படுகின்றது?
4. ஏனைய காலங்களை விட சமய அனுஷ்டான நிகழ்வுகளில் கிழக் கிலங்கை முஸ்லிம்கள் அதீத பிரயத்தனம் காட்டுவதற்கான காரணம் யாதாக இருக்கலாம்?

## இலக்கிய மீளாய்வு

Nurus Shalihina, Muhammad Sholihin (2022), Ramadan: the month of fasting for muslim and social cohesion—mapping the unexplored effect எனும் ஆய்வுக் கட்டுரையானது இஸ்லாமிய வழிபாடுகளுக்கும் சமூக ஒருமைப் பாட்டுக்கும் இடையே உள்ள உறவைப் பற்றி ஆய்வு செய்கிறது. ரமழானின் ஆன்மீக, பொருளாதார மற்றும் பண்பாட்டு அம்சங்களைப் பற்றியும் இவ்வாய்வு விபரிக்கின்றது. சமூக நலன்களை உருவாக்கும் வல்லமை பொருந்தியதான ரமழான்கால நோன்பு சமூக மாற்றத்திற்கான

நேரடிப்பங்களிப்பை வழங்குவதோடு சமூகக் கூட்டுறவை, ஒண்றினைவு மனப்பான்மை, சகிப்புத்தன்மை, குழு உணர்வு போன்றவற்றில் நோன்பு தாக்கம் செலுத்துவது ஆய்வாளர்களால் கண்டறிப்பட்டுள்ளது. முடிவான சமயக் கடமைகள் மூலமாக சமூக ஒற்றுமையை உருவாக்க முடியும் என்பதை ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளதோடு, தானதர்மத்தின் மூலம் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள் போன்றனவவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

முராட்டோகன் ரமலான் மாதத்தின் சமையல் பாரம்பரியங்களின் வரலாற்று மற்றும் பண்பாட்டு முக்கியத்துவத்தை ஆராய்ந்துள்ளார், குறிப்பாக ஒட்டோமான் காலத்தில் நிலவிய பழக்கவழக்கங்களை விளக்குகிறார். இதில் "திஷ் கிராசி" என்ற மறக்கப்பட்ட வழக்கத்தை குறிப்பிடுகிறார், இதன்மூலம் இஃப்தார் விருந்திற்குப் பின்பு விருந்தாளிகளுக்கு சிறிய பரிசுகள் வழங்கப்பட்டன. இது இஸ்லாமிய சமூகத்தில் உள்ள விருந்தோம்பலை வெளிப்படுத்தும் ஒரு சிறப்பான வழக்கமாக இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். மேலும், "ரமசானியெலிக்" எனப்படும், ரமலான் மாதத்திற்கு முன்பாகவே தேவையான உணவுப் பொருட்களை சேமிக்கும் பழக்கத்தையும் ஆய்வு செய்கிறார். இவற்றோடு இணைந்து, ரமலான் மாத உணவு கலாச்சாரம் சமய அனுஷ்டானங்களுடன் எவ்வாறு இணைந்துள்ளது என்பதை விரிவாக ஆராய்கிறார். மேலும், ஒட்டோமான் காலத்தில் நடைபெற்ற ரமலான் விருந்துகளை ஆய்வு செய்வதன் மூலம், சமையல் சம்பிரதாயங்கள் குடும்ப மற்றும் சமூக உறவுகளை எவ்வாறு வடிவமைத்தன என்பதையும் விளக்குகிறார். உணவு வகைகள், அலங்கார மேசை அமைப்புகள், மற்றும் சம்சம் நீர், மக்கா மற்றும் மதீனா பேரிச்சை போன்ற உணர்வு பூர்வமான கூறுகள், ரமலான் மாத உணவு மதப்பதிவுகளுக்கான ஓர் ஊடகமாகவும், சமூக உறவுகளை வலுப்படுத்தும் ஒரு கருவியாகவும் செயல்படுகிறது என்பதைக் கூறுகின்றனர். ஆய்வாளர் இந்த ஆய்வுகளுடன் இணைந்து, காலப்போக்கில் ரமலான் பாரம்பரியங்கள் எவ்வாறு மாறிவிட்டன என்பதையும், இவை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார்.

இவ்வாறு ரமழான் காலத்தின் சமூக மாற்றங்கள், உணவுப் பழக்கங்கள் தொடர்பான ஆய்வுகள் பல மேற்கொள்ளப் பட்டாலும் முஸ்லிம்களின் ரமழான் கால கலாச்சார நடைமுறைகள் குறித்த சமயச் சமூகவியல் ஆய்வுகள் கிழக்கிலங்கையை மையப்படுத்தியதான அமைப்பில் எம் தேடலுக்குட்பட்ட வகையில் இதுவரை மேற்கொள்ளப் படவில்லை. எனவே இவ்வாய்வு இடைவெளிகளை நிறைவு செய்யும் வகையிலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது முழுதளவான ரீதியில் ஒரு பண்புரீதியான ஆய்வாகும். இவ்வாய்வு நோக்கமாதிரியை அடிப்படையாகக் கொண்டு தகவல்களைத் திரட்டியிருக்கிறது. முதலாம் நிலைத்தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக நேர்காணல், நேரடி அவதானம், இலக்குக்குழு கலந்துரையாடல் போன்ற உத்திகளைப் பயன்படுத்துகின்றது. 11 நேர்காணல், 03 இலக்குக்குழு கலந்துரையாடல் மற்றும் 03 நேரடி களஆய்வு போன்ற முதலாம் நிலைத்தரவுகளை பெற்றுக் கொள்ளும் உத்திகளைப் பயன்படுத்தி முதலாம் நிலைத்தரவுகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆய்வின் இரண்டாம் நிலைத்தரவுகள் எழுதித் தொகுக்கப்பட்ட ஆவணங்கள், ஆய்வுக் கட்டுரைகள், புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் போன்றவற்றிலிருந்து பெறப் பட்டுள்ளன. ஆய்வில் எடுக்கப்பட்ட

தரவுகளானது MS Word இனைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**கலந்துரையாடலும் கண்டறிதல்களும்**

**1. ரமழான் வரவேற்பு நிகழ்வுகள்**

ரமழானை வரவேற்கும் முகமாக பல்வேறு கலாசார நிகழ்வுகள் கிழக்கிலங்கையில் நடைபறுவதனைக் காணலாம்.

**a) வீடு கழுவுதல்**

இந்நிகழ்வு ரமழான் காலத்தில் பெரும்பாலும் அனைவரினாலும் மேற்கொள்ளப்படும். இது குறித்து நேர்காணலில் வினவப்பட்டபோது ஒருவர் பின்வருமாறு பதிலளித்திருந்தார் "வீட்டினை சுத்தம் செய்து நீரூற்றி கழுவுவது மட்டுமல்ல. எமது ஆடைகள், தொழுகைக்கான ஆடைகள், பாதணிகள் உட்பட அனைத்தையும் சுத்தம்செய்து ரமழானை வரவேற்பது எமது பாரம்பரியமாகவே மாறிவிட்டது" (நேர்காணல் 01).

ஏனெனில் ரமழான் மாதத்தில் நாம் செய்யும் நன்மைக்கான கூலிகள் பல மடங்காக கிடைப்பதாலும் Ibn Khuzaymah, Hadith No. 1887 சுத்தம் இன்மையினால் அவை இழக்கப்பட நேரடலாம் என்பதனால் மக்கள் இச்சுத்தத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். மேலும் சுத்தம் குறித்து இஸ்லாம் கூறுகையில் "சுத்தம் ஈமானின் பாதியாகும்" (Muslim, 223) என்கிறது.

**b) வீட்டுக்கு வர்ணப்பூச்சு பூசுதல்**

இதனை ஒரு சில மக்கள் செய்ததனைக் காணக் கூடியதாய் இருந்தாய். குறிப்பாக மிகவும் மார்க்கப்பற்று மிக்கவர்கள் செய்யக்கூடியவர்களாக இருந்தனர். அதுமட்டுமன்றி ஒரு சிலர் புதிய திரைச்சீலைகளைத் தைத்துப் பயன்படுத்து வதனையும் பார்க்கக்கூடியதாக இருந்தது. மேலும் பள்ளிவாயல்களுக்கும் ரமழானை வரவேற்கும் முகமாக வர்ணப்பூச்சு இடும் நடைமுறை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**2. ஸஹர் உணவு**

ஸஹர் என்று சொல்வது தமிழ்பதமல்ல இது ஒரு அரேபிய பதமாகும். ஸஹர் உணவு என்பது அதிகாலை நேரத்தில் சுபஹ் (அதிகாலை தொழும் தொழுகை) தொழுகைக்கு முன்னர் முஸ்லிம்கள் துயிலெழுந்து உணவருந்துவதனை இது குறிக்கின்றது. மேலும் சுபஹ் தொழுகைக்கான அதான் (தொழுகைக்கானஅழைப்பு) ஒலிக்கப்பட்ட பின்னர் இந்த உணவை அருந்தமுடியாது அது இஸ்லாமிய மார்க்க சட்டமாகும். இந்த ஸஹர் உணவு பெரும்பாலும் ரமழான் காலத்தில் முக்கியமாக உண்ணப்படுகின்ற உணவாகக் காணப்படுகின்றது. வழமை போன்று இந்த உணவைச் சமைக்கும் வழக்கத்தை மக்கள் கொண்டிருக்கின்றார்கள். இது வயது முதிந்தவர்கள் தொடர்கம் சிறியவர்கள் வரை இந்த உணவு உண்ணப்படுகின்றது. இதற்குப் பிறகு மஃரிப்தொழுகை (சூரியன் மறைந்ததன் பின்னர் தொழப்படும் தொழுகை) இதுவரை முஸ்லிம்கள் நோன்பில் ஈடுபடுகின்றார்கள். இந்த ஸஹர் உணவு பெரும்பாலும் சுண்டல், பொரியல் விரும்பி உண்ணப்படுவதாக பல நேர்காணல்களில் மூலம் கிடைக்கப் பெற்றது. இதனுடன் இறுதியில் தயிரில் கரைத்து உண்ணும் வழக்கம் காணப்பட்டதை அவதானிக்க முடியுமாக இருந்தது. இது குறித்து வினவப்பட்டபோது ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

> **"ஸஹர்நேரத்தில் எளிமையான முறையில் ஒரு சுண்டலும் சிறுபொரியலும் போது மாக இருக்கிறது' (நேர்காணல் 02).**

இவ்வாறு மக்கள் குறிப்பிடுவதனைக் காணலாம்.

**3. இப்தார் விஷேட நிகழ்வுகள்**

ரமழான் காலங்களில் மிகவும் சிறப்பாக மேற்கொள்ளப்படும் நிகழ்வு "இப்தார்" ஆகும். உண்மையில் இப்தார் என்பது

நோற்ற நோன்பை துறப்பதாகும். இது குறித்து நபி(ஸல்) அவர்கள் கூறும்போது

“மக்கள் விரைவில் நோன்பு திறப்பதனால் நன்மை அடைவார்கள்” (Al-Bukhari, Hadith No. 1957; Muslim, Hadith No. 1098).

“ஒருவர் நோன்பாளிக்கு இப்தார் உணவளித்தால், அவன் நோன்பு நோற்றதற்குரிய நன்மையைப் பெறுவான், ஆனால் அது நோன்பாளரின் நன்மையில் குறைவாகாது” At-Tirmidhi, Hadith No. 807; Ibn Majah, Hadith No. 1746.

“நோன்பாளர் பேரீச்சம் பழத்தால் நோன்பு திறந்தால் அது சிறந்ததாகும். அது கிடைக்காவிட்டால், நீரால் நோன்பு திறக் கட்டும், ஏனெனில் அது புனிதமானதாகும்” (Abu Dawood, Hadith No. 2355; At-Tirmidhi, Hadith No. 695).

இப்தார் என்பது நோன்பின் ஒரு முக்கிய அங்கமாகும். இப்தாரை விரைவாக செய்தல், பேரீச்சம்பழம் அல்லது தண்ணீரால் நோன்பு திறத்தல், மற்றும் மற்றவர்களுக்கு இப்தார் உணவளித்தல் போன்ற செயல்கள் ஹதீஸ்களில் வலியுறுத்தப் பட்டுள்ளன. இவை அனைத்தும் முஸ்லிம்கள் கடைப்பிடிக்க வேண்டிய முக்கியமான வழக்கங்களாகும். எனினும் கிழக்கிலங்கையில் பல வித்தியாசமான இப்தார் உணவுப்பொருட்களைக் காணக் கிடக்கின்றது. இது குறித்து நேர்காணல் செய்தபோது

“இப்தார் நிகழ்வின்போது பெரும்பாலும் 3 ஈச்சம்பழம், தண்ணீர் மட்டுமல்லாது கஞ்சி, சம்ஸா, ஒரேஞ்ச், பலூடா அல்லது ஏதாவது ஒரு பழச்சாறு பெரும்பாலும் எடுக்கப் படுகிறது” (நேர்காணல் 03). எனக் கூறினார்.

இந்நிகழ்வு வீடுகளிலும் மேலும் குடும்பங்கள் சேர்ந்து வெளியிடங்களிலும் மேற்கொள்ளப் படுவது மிகவும் விஷேடமான ஒரு கலாசாரமாகும்.

**4. தலைநோன்புச் செப்பு**

முதலாவது நோன்பு (விரதம்) ஆரம்பிப்பதற்கு முன்பு தனது உறவினர்கள் அதிலும் குறிப்பாக பிள்ளைகள் தனது பெற்றோருக்கு அந்த நோன்புகாலத்துக் தேவையான உணவுவகைகள் அவற்றிலும் குறிப்பாக சீனி, பால்மா, ஈச்சம்பழம், அரிசி முதலிய பொருட்களை தனது பெற்றோருக்கும் மாமனார் மாமியாருக்கும் சம்மந்த உறவுக்காரர்கள் அதிலும் குறிப்பாக ஆணுடைய தாய் தந்தைக்கு ஒரு செப்பு அடிப்படையிலான பொருட்களை எடுத்து வந்து கொடுப்பதனை வழக்கமாகக் கொண்ட பிரதேசமாக கிழக்கிலங்கையினைக் காணலாம். இவை சில இடங்களில் அருகிப்போகின்ற போதிலும் பெரும் பாலான மக்களினால் விரும்பி ஏற்கப் படுகின்றது. இதுகுறித்து மக்களிடம் வினவப்பட்டபோது ஒருவர் பின்வருமாறு பதிலளித்தார்.

“நோன்பு ஆரம்பிப்பதற்கு முதல்நாள் நாங்கள் பெரும்பாலும் கடைகளுக்கு செல்வது குறைவு ஏனென்றால் எங்களது மூத்த அண்ணன் அவரது மனைவி பிள்ளைகளுடன் எனது அம்மா அப்பவைத்தேடி எங்களது வீட்டுக்கு வருவார்கள். எனவே அவர்களை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறோம்.” (நேர்காணல் 04).

எனவே தலைநோன்புச் செப்பு என்பது பெரும்பாலும் முதியவர்கள் தாய் தகப்பனுக்குத் தேவையான பொருட்களை கொண்டுவந்து கொடுத்து சந்தோஷமாக இருக்கின்ற ஒரு நிகழ்வும் கிழக்கிலங்கை முஸ்லிம்களிடம் காணக்கூடியதாக இருந்தது. எனினும் பொதுவாகவே தாய் தந்தையை நல்லமுறையில் கவனிக்கின்ற வழக்கம் கிழக்கிலங்கை முஸ்லிம்களிடம் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

**5. நோன்புக் கஞ்சி**

இது மிகவும் சுவாரஸ்யமான நிகழ்வாகும். அனேகமான பள்ளி வாயல்களில் கஞ்சி Porridge காய்ச்சுவதற்காக கோகிகள் நியமிக்கப்பட்டு இவை மேற்கொள்ளப்படும். அஸர் (பின்னேர) தொழுகைக்குப் பிறகு இது பொது மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும். இது குறித்து ஆய்வுமாதிரிகளிடம் வினவப்பட்ட போது பின்வருமாறு பதிலளித்தனர்.

“நோன்புக் கஞ்சி வாங்குவது ஒரு மகிழ்ச்சியான விடயம். இதற்காக ஆளுக்கு ஒரு வாளியுடன் நாங்கள் நண்பர்களுடன் செல்வோம்.” (நேர்காணல் 05).

இதனைக் காய்ச்சுவதற்காக சமூகத்திலுள்ள தனவந்தர்கள் பணத்தொகைகளை வழங்குவர். இக்கஞ்சி மிகவும் ருசியாகவும் உடலுக்கு ஆரோக்கியமாகவும் நோன்பாளிக்கு இதமாகவும் இருக்கிறது. இதனை முஸ்லிம்கள் மட்டுமன்றி மாற்றுமத சகோதரர்களும் விரும்பி உண்பர். இது குறித்து ஒருவர் கூறுகையில் பின்வருமாறு பதிலளித்தார்

“எனது மாற்றுமத நண்பர்கள் கஞ்சியினை விரும்பி உண்பர். நாங்கள் பல்கலைக்கழக விடுதிகளுக்கு அதனை கொண்டுசென்று உண்டு மகிழ்ந்திருக்கிறோம்” (நேர்காணல் 06). தனிய நோன்புகால உணவுப் பண்பாடாக கஞ்சி காணப்படுகின்றது.

**6. துரித உணவுக்கலாசாரம்**

துரித உணவு எனும் போது நோன்பு துறக்கும் வேளைகளில் உரைப்பான பல்வேறு துரித உணவுகள் முஸ்லிம்களால் விரும்பி ஏற்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது. சம்சா, பெட்டீஸ், கறிகொச்சிக்காய், ரோல்ஸ், கட்லட் இவைகளை கஞ்சியுடன் சேர்த்து உண்ணுகின்ற நடைமுறை கிழக்கிலங்கை முஸ்லிம்களிடம் காணப்படுகின்றது. ஆரோக்கியம் என்ற விடயத்தையும் தாண்டி இவை பெரும்பாலும் கிழக்கிலங்கை முஸ்லிம்கள் உண்ணக்கூடியவர்களாக காணப்படுகின்றார்கள். மழை காலத்தில் முளைக்கின்ற காளான்கள் போல இக்காலத்தில் பல்வேறு துரித உணவுக் கடைகள் உருவாகியிருப்பதனையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

நோன்பு துறக்கும்போது பலச்சாறு மக்களினால் விரும்பி உண்ணப்படுகின்றது. அதிலும் தற்காலத்தில் பலூடா, சன்குயிக் போன்றவைகள் மக்களினால் ஏற்று உண்ணப்படுவதனை காணக்கூடியதாக இருக்கிறது. இன்னும் சில மனிதர்கள் தேநீர், பால் தேநீர் போன்றவற்றையும் விரும்பி உண்ணக் கூடியவர்களாக காணப்படுகின்றார்கள்.

**7. இரவுநேரத் தொழுகை (தராவீஹ்)**

இது ஓர் விஷேட நிகழ்வாகும். இஸ்லாமியர்கள் ஒரு நாளைக்கு 5 வேளைத் தொழுகைகளை பள்ளிவாயலில் ஜமாத்தாக (கூட்டாக) நிறைவேற்றும் வழக்கம் கொண்டவர்களாவர். எனினும் இஷா (ஒரு நாளின் இறுதி கட்டாய பர்ளு) தொழுகைக்குப் பிறகு தொழப்படும் தொழுகையாகும். இதனை தராவீஹ் என்று அழைக்கப்படுகின்றது. இதற்கு வயது வித்தியாசமின்றி அனைவரும் கலந்து கொள்வதனைக் காணலாம். விஷேடமாக பெண்களுக்கும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கும். நின்று தொழ முடியாதவர்கள் கதிரைகளில் இருந்து தொழுவதனைக் காணமுடியுமாக இருந்தது. இது குறித்து வினவப்பட்டபோது

“இரவுநேரத் தொழுகைக்கு வரும் மக்கள் பல பண உதவி, நன்கொடைகள் வழங்குகின்றனர். இதன் மூலம் பள்ளிவாயலின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பேணக்கூடியதாக உள்ளது” (FGD 01).

அல்குர்ஆனை மனனமிட்ட ஹாபிழ்கள் இத்தொழுகையினை நடாத்துவதும் அவர்களின் பின்னால் நின்று மக்கள்

பக்தியுடன் தொழுவதையும் காணலாம். ரமழானின் இறுதி பத்து தினங்களில் இரவின் கடைசிப்பகுதியில் அதாவது அதிகாலை 01 மணி தொடக்கம் 04 மணிவரை கியாமுல்லைல் என்ற நடுநிசித்தொழுகையும் அனைவராலும் நிறைவேற்றப்பட்ட விஷேட பிரார்த்தனைகளும் இடம் பெறுகின்றது அவதானிக்கப்பட்டது.

### 8. இறுதிப்பத்தும் இஃதிகாபும்.

கிழக்கிலங்கை முஸ்லிம்களிடம் மாத்திரமன்றி முழு உலகிலும் அநேகமான முஸ்லிம்கள் இறுதிப்பத்தில் பள்ளி வாசல்களில் இஃதிகாப் இருப்பதனை காணக்கூடியதாக இருக்கிறது.

இஃதிகாப் என்ற அரபுப் பதம் தரித்திரித்தல் எனப் பொருள்படும். இஸ்லாமிய நடைமுறையில் இஃதிகாப் என்பது இறைவனுக்குக் கீழ்படிந்து ஒரு குறிப்பிட்ட காலம் பள்ளிவாயலில் தரித்திருந்து வணக்கத்தில் ஈடுபடுவதாகும். ரமழான் காலத்தில் மாத்திரமன்றி ஏனைய காலங்களிலும் இவ்வணக்கம் செய்யமுடிவதோடு இவ்வணக்கத்திற்கான குறிப்பான நிபந்தனைகள் உள்ளதும் கவனிக்கத்தக்கதாகும். நபி(ஸல்) அவர்கள் இஃதிகாப் வணக்கத்தை ரமழானின் கடைசிப்பத்துகளில் செய்யும் படி மக்களை ஆர்வமூட்டியுள்ளார்.

லைலதுல் கத்ர் இரவினைதேடிய வேட்கையில் மக்கள் இறுதிப்பத்தில் இஃதிகாப் இருந்த அந்த நன்மைகளை பெற்றுக்கொள்ள முயல்வதனை அவதானிக்க முடிந்தது. இதுபற்றி பள்ளி நிருவாகிகளிடம் வினவப்பட்டபோது

“பெரும்பாலான முஸ்லிம் ஆண்கள் தமது பிள்ளைகளுடன் இரவில் பள்ளிவாயலில் வந்து இஃதிகாப் இருந்து தூங்கி பின்பு நோன்பு நோற்கின்ற நேரங்களில் தனது பிள்ளைகளுடன் வீட்டுக்குத் திரும்புகின்றார்கள். இதனால் பள்ளிவாசல் உயிர்பெறுவதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது.” (FGD 02)

எனவே இஃதிகாப் நடைமுறையும் ரமழான் காலத்தில் பெரும்பாலாக கிழக்கிலங்கை முஸ்லிம்கள் விரும்பி ஏற்று வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

### 9. அதிவிஷேட லைலதுல் கத்ர் இரவு வணக்கம்

ரமழான் காலங்களில் இரா வணக்க வழிபாடு காணப்படுகின்றது. எனினும் லைலதுல் கத்ர் இரவு பற்றிய தேடல் கிழக்கிலங்கை முஸ்லிம்களிடம் மிகவும் அதிகமாக காணப்படுகின்றது.

லைலதுல் கத்ர் இரவு என்பது அல்குர்ஆன் இறக்கப்பட்ட இரவாகும் (அல்குர்ஆன் 97:1). இவ் இரவு ரமழான் மாதத்தின் கடைசிப்பத்து நாட்களில் ஒற்றைப்படையான இரவுகளில் தோன்றுகின்றது. ஆயிரம் மாதங்களை விட சிறந்தது (அல்குர்ஆன் 97:3 44:3), விசுவாசத்துடனும் நன்மையை ஆதரவு வைத்தும் அவ்விரவில் வணங்குபவர்களின் பாவங்கள் மன்னிக்கப்படும் (ஸஹீஹுல் புகாரி, 28), மனிதர்களின் செயற்பாடுகள் நிர்ணயம் செய்யப்படும் இரவு (அல்குர்ஆன் 39:67) மலக்குமார்கள் கூட்டம் கூட்டமாக பூமிக்கு இறங்கும் இரவு (97:4).. இவ்வாறாக இந்த இரவுக்கு பல்வேறு சிறப்புகள் காணப்படுகின்றது.

ஆயரம் மாதங்களை விட சிறந்த இரவாக இந்த லைலதுல் கத்ர் இருப்பதனால் இதனைத் தேடுகின்ற வேட்கை வயது முதிர்ந்தவர்கள் தொடக்கம் சிறுவர்கள் வரை காணப்படுவதனைக் காணலாம். ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் இக்கால கட்டத்தில் இரா வணக்கங்களில் பள்ளி வாசல்களில் ஈடுபடுவதோடு தனது வீடுகளிலும் இரா வணக்கங்களில் ஈடுபடுவதனையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

### 10. நாரிஷா எனும் நடைமுறை (உணவு வழங்குதல்)

நாரிஷா என்பது இரவுநேரத் தராவீஹ் தொழுகைகளுக்கு போகும்போது அங்கு வருகின்ற முஸ்லிம்கள் தம்மால் இயலுமான பிஸ்கட், துரிதஉணவுகள் மற்றும் சில வகையான பொருட்களைக் கொண்டுவந்து அங்கு தொழவருகின்ற மக்களுக்கு பகிர்ந்தளித்து உண்டு மகிழ்வதனை கூறப்படுகின்றது. இதில் சிலர் தேநீரைக் கொண்டுவந்து மக்களுக்கு பகிர்ந்தளிப்பார்கள். இது பெரும்பாலும் ரமழானின் இறுதிப்பத்தில் நடைபெறுவதனைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதுபற்றி வினவப்பட்டபோது ஒருவர் பின்வருமாறு பதிலளித்தார்.

“ரமழானின் 27ம் நாளன்று எங்களுக்கு மிகவும் அதிகமான பிஸ்கட்கள் இனிப்புப்பண்டங்கள் எல்லாம் தருவார்கள். அவைகளை நாங்கள் பெரும்பாலும் ஒவ்வொரு பள்ளிக்கும் செல்கின்றவர்கள் வீடுகளில் கொண்டுவந்து அதை நாங்கள் கூட்டாக ஸஹர் நேரத்தில் விரும்பி மகிழ்ச்சிகரமாக உண்டு கொண்டிருக்கிறோம்” (நேர்காணல் 07)

எனவே சிறுவர்களாலும் பெரியவர்களாலும் மகிழ்ச்சிகரமாக விரும்பி போற்றப்பட்டு ஏற்று நடைமுறைப்படுத்துதப்படுகின்ற நிகழ்வாக இது காணப்படுகின்றது. அத்துடன் சமூகத்தின் காணப்படுகின்ற செல்வந்தர்கள், தனவந்தர்கள் இதற்காக பல்வேறு உதவிகளைச் செய்வதாக பள்ளி நிருவாகம் குறிப்பிடுகின்றது.

### 11. அல்குர்ஆன் திலாவத்

அல்குர்ஆன் திலாவத் என்பது சங்கைமிக்க திருக்குர்ஆனை ஓதுவதனைக் குறிக்கின்றது. இது தொடர்ச்சியாக அனைத்துவிதமான காலங்களில் ஓதப்படுகின்றபோதிலும் ரமழான் மாதத்தில் முஸ்லிம்கள் அல்குர் ஆனை அதிகமதிகம் ஓதக்கூடிய நடைமுறை கிழக்கிலங்கை மட்டுமல்ல முழு இலங்கையிலும் காணப்படுவதனை நோக்கலாம். ஏனெனில் ஏனைய காலங்களை விட ரமழான் மாதத்தில் இதற்கு அதிக நன்மை கிடைப்பதே இதற்கு காரணமாக அமைகின்றது. இதுபற்றி வினவப்பட்டபோது

“குர்ஆனில் ஒரு எழுத்தை ஓதுபவருக்கு ஒரு நன்மை உள்ளது. ஒவ்வொரு நன்மைக்கும் பத்து மடங்கு கூலி உள்ளது. “அலிஃப்-லாம்-மீம்” என்பது ஒரு எழுத்து அல்ல. “அலிஃப்” தனியாக ஒரு எழுத்து, “லாம்” தனியாக ஒரு எழுத்து, “மீம்” தனியாக ஒரு எழுத்து. (At-Tirmidhi, Hadith No. 2910), b (Ahmad, Hadith No. 6626; Al-Hakim, Hadith No. 2085) (FGD 03)

மக்களின் கலாசார நடைமுறைகளில் இதன் வழக்கத்தைப் பார்க்கின்றபோது, “எனது தந்தை ஒரு முழுக்குர்ஆனை ஓதி முடிப்பதன் மூலம் எனக்கு ஒரு பரிசுப்பொருள் வாங்கித்தருவதாக வாக்களித்துள்ளார். எனவே நன்மையை நாடியும் எனது தந்தையின் பரிசையும் எதிர்பார்த்து நான் அதிகமாக அல்குர்ஆன் ஓதுகின்றேன்” (நேர்காணல் 08) என ஒருவர் குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கதாகும்.

எனவே மேற்குறித்தவற்றை தொகுத்து நோக்குகின்றபோது ரமழான் காலத்தில் அதிகதிகமாக அல்குர்ஆனை ஓதக்கூடிய மக்களாக கிழக்கிலங்கை முஸ்லிம்களை காணக்கூடியதாக உள்ளது.

### 12. ஸகாத், ஸதகா (தர்மம்)

ஸகாத் என்பது செல்வம்படைத்த இஸ்லாமியர்கள் தங்களுடைய வளரக் கூடிய செல்வத்தை ஆண்டுதோறும் கணக்கிட்டு அது ஸகாதின் அளவை அடைந்திருந்தால் குறிப்பிட்ட 08 கூட்டத்தினருக்கு தனது செல்வத்தில் ஒரு சிறிய பகுதியைக் கட்டாயம் கொடுக்க வேண்டிய விடயமாகும். மேலும் ஸதகா என்பது இஸ்லாமியர்கள் நன்மையை ஆதரவு வைத்து ஏழை எளியவர்களுக்கு

வழங்கிடும் தர்மங்களாகும். ரமழான் காலத்தில் அதிகமாக தனக்கு உரித்தான ஸகாத் தொகையை கொடுக்கக் கூடியவர்களாக கிழக்கிலங்கை முஸ்லிம்களை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இதற்கு இம்மாதகாலத்தில் கிடைக்கும் அதிகரித்த நன்மையே காரணம் என்று மக்கள் கூறுகின்றார்கள். இதுபற்றி ஒரு பெண்ணிடம் வினவப்பட்டபோது பின்வருமாறு பதிலளித்தார்.

“எனது நகைகளுக்குரிய ஸகாத் களை ஒவ்வொரு ரமழானிலும் நான் கொடுப்பேன். இதற்குரிய பரிபூரண நன்மையைநான் எனது இறைவனிடமிருந்து எதிர்பார்க்கின்றேன்” (நேர்காணல் 09).

மேலும் ரமழான் காலத்தில் வழங்கடுப் படும் தர்மமே மிகச் சிறந்த தர்மம் என நபி(ஸல்) கூறினார்கள் (திர்மிதி, 2407). எனவே இக்காலகட்டத்தில் ஸகாத், ஸதகா போன்ற தர்மங்களை அதிகமதிகம் வழங்கக்கூடிய மக்களாக கிழக்கிலங்கை முஸ்லிம்களைக் காணக்கூடியதாக உள்ளது.

### 13. ஈதுல் பித்ர் எனும் பெருநாள் ஆயத்தம்

முஸ்லிம்கள் ஈதுல் பித்ர், ஈதுல் அழ்ஹா என்ற இரண்டு பெருநாட்களை கொண்டாடுகின்றார்கள். இதில் ஈதுல் பித்ர் என்பது இஸ்லாமியர்களின் முதலாவது பெருநாளாகும். இது ரமழான் மாதம் முடிவடைந்ததும் முஸ்லிம்களால் கொண்டாடப்படும். இதற்கான ஆயத்தங்களை செய்வதில் மிகவும் பிரயத்தனம் காட்டுபவர்களாக கிழக்கிலங்கை முஸ்லிம்களைக் காணலாம். ஆடைத்தெரிவுகளும் அலங்கார நடவடிக்கைகளும் மேலும் கலாசார உணவுத் தயாரிப்பு நடவடிக்கைகளும் மிகவும் துரிதமாக நடைபெறும் பிரதேசமாக கிழக்கிலங்கையை அடையாளப் படுத்தலாம். இதுபற்றி வினவப்பட்டபோது பின்வருமாறு பதிலளித்தனர்.

“இம்முறை எனக்கு லஹங்கா வாங்கித்தருவதாக அம்மா கூறுயிறுக்கிறார். அதிலும் இலாபமாக பல கடைகளில் ஆடைகள் கிடைப்பதாக அறியத் தெரிந்திருக்கின்றது. எனவே நாங்கள் இம்முறை நோன்பு ஆரம்பிப்பதற்கு முன்னமே ஆடைகளை வாங்கிவிட்டோம். ஏனெனில் நோன்புகாலங்களில் இபாதத் (வழிபாடு) செய்வதுதான் முக்கியம் என எனது அம்மா கூறினார்” (நேர்காணல் 10)

ஆரம்ப காலங்களில் ரமழான் காலங்களில் ஆடைத்தெரிவுகள் எடுக்கப் பட்டபோதிலும்தற்காலத்தில்சற்றுரமழான் காலத்திற்கு முன்பே ஆடைத்தெரிவுகளை முடிக்கின்ற கலாசாரங்கள் உருவாகி வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது. இதுவும் ஒரு வரவேற்கத்தக்க அம்சமாக காணப்படுகின்றது.

தற்போது ஆடைத்தெரிவுகளுக்கு Online Business, Reels, Tiktok மூலம் எந்தக் கடைகளில் எவ்வளவு இலாபகரமான முறையில் ஆடைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென்று விளம்பரப்படுத்தல்கள் இருப்பது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் பிரயோசனமாக இருக்கிறது.

### 14. கலாசார உணவு தயாரிப்பு

கிழக்கிலங்கை முஸ்லிம்களுக்கென்று ஒரு தனியான பாரம்பரியம் இருப்பதைப் போன்று அவர்களது உணவுக்கலாசாரமும் தனியான பாரம்பரியம் மிக்கது.

கிழக்கிலங்கை முஸ்லிம்கள் தமக்கே உரித்தான பாணியில் கலாசார திண்பண்டங்களை தயாரித்துக் கொள்ளும் வழக்கம் காணப்படுகின்றது. குறிப்பாக முருக்கு, தொதல், வட்டிலப்பம், சோவி, தூகச்சி, பயற்றம் பலகாரம், முந்திரி கொத்து, எள்ளுருண்டை இவைகளை குடும்பமாக கூடி தயாரித்து பெருநாள் வேளைகளில் உண்ணுகின்ற வழக்கம் இம்மக்களிடம் காணப்படுவதை நோக்கலாம். இதுபற்றி

மக்களிடம் வினவப்பட்டபோது ஒருவர் பின்வருமாறு பதிலளித்துள்ளார்.

“இம்முறை ஈச்சம்பழம் கச்சான் விதை பலகாரம் செய்வதாக உனது அம்மா கூறியிருக்கிறார். அது மிகவும் ருசியானதாக இருக்கும்.”(நேர்காணல் 11)

உணவு எந்தவிதமான இரசாயன பதார்த்தங்களும் கலக்காது தனியே நாட்டுப் பொருட்களை பயன்படுத்தி செய்யப்படுகின்ற பெரும்பாலான உணவுகள் இதில் தயாரிக்கப்படுவதனைக் காணலாம். உணவுச் சமூகவியல் அடிப்படையில் நோக்கும்போது இது ஒரு வரவேற்கத்தக்க கலாசார அம்சமாகும். இவ்உணவுகள் தயாரிக்கப்பட்டு பெருநாள் தினத்தில் வரும் உறவினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு மகிழ்ச்சி கொண்டாடப்படும்.

## முடிவுரை

மேற்குறித்த தகவல்களினூடான பகுப்பாய்வை நோக்குகின்றபோது கிழக்கிலங்கை முஸ்லிம்கள் தனக்கே உரித்தான ஒரு தனித்துவமான பாரம்பரியத்தை ரமழான் காலத்திலும் வெளிப்படுத்துவதனை காணக்கூடியதாக இருக்கிறது. இதற்கு மேற்குறித்த மக்களின் கருத்து உரையாடல்கள் கருத்தாடல்கள் மிகவும் ஆதாரமாக அமைந்து விடுகின்றன. எனவே நன்மை குறித்த வேட்கையில் கிழக்கிலங்கை முஸ்லிம்கள் ரமழான் காலத்தில் செயற்பட்டு ஏழைகளின் பசியை உணர்வதோடு தக்வா எனும் உள்ளச்சஉணர்வையும் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் செயற்படுவதனையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

## பரிந்துரைகள்

கிழக்கிலங்கை முஸ்லிம்கள் தனக்கே உரித்தான ஒரு தனித்துவமான ரமழான் காலப் பாரம்பரிய நிகழ்வுகளினை மேற்கொள்கின்றபோதிலும் அதில் சில நன்மைகளும் சில முரண்பாடுகளும் காணப்படுவதனை அவதானிக்கலாம். எனவே முரண்பாடுகளை இழி வழுவாக்குவதற்காக பின்வரும் பரிந்துரைகளைக் கூறலாம்.

1. ரமழான் காலங்களில் துரித உணவுகளைத் தவிர்த்து ஆரோக்கியமான உணவுகளை உண்ணல்.
2. குளிரான பானங்களை இப்தார் நேரங்களில் தவிர்த்துக் கொள்ளுதல்.
3. பழங்கள் உண்ணும் வழக்கத்தை ஏற்படுத்துதல்.
4. ஆரோக்கியத்தைப் பேணும் வகையில் நடுத்தரமாக உணவுகளை உண்ணுதல்.
5. ஏழை எளியவர்களுக்கு இப்தார், ஸகர் ஏற்பாடுகளை செய்யும் வழக்கங்களை பரவலடையச்செய்தல்.

சமயச் சமூகவியல் பார்வையில் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் ரமழான் கால நிகழ்வுகளானவை சமயச் சமூகவியல் அடிப்படையில் நோக்கும்போது சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றன.

## உசாத்துணைகள்


1. Abu Dawood. (1984). Sunan Abu Dawood (Hadith No. 2355). Dar Al-Risalah Al-Alamiyah.
2. Ahmad, A. (1999). Musnad Ahmad (Hadith No. 6626). Mu’assasat al-Risalah.
3. Al-Bukhari, M. I. (1957). Sahih al-Bukhari (Hadith No. 1957). Dar Ibn Kathir.
4. Al-Ghazali. (2015). Ihya Ulum al-Din. Dar al-Kutub al-Ilmiyyah.
5. Al-Hakim, M. (1990). Al-Mustadrak ‘ala al-Sahihayn (Hadith No. 2085). Dar al-Kutub al-Ilmiyya.
6. Al-Qur’an. (2004). Translation of the meanings of the Noble Qur’an in the English language. King Fahd Complex for the Printing of the Holy Qur’an.
7. Al-Qur’an. (n.d.). Surah Al-Qadr (97:1).
8. Al-Qurtubi. (2003). Tafsir al-Qurtubi. Dar al-Kutub al-Misriyyah.
9. An-Nawawi. (1996). Riyadh as-Salihin. Darussalam.

10. At-Tirmidhi, A. I. (1975). Jami' At-Tirmidhi (Hadith No. 2910). Dar Ihya al-Turath al-Arabi.
11. At-Tirmidhi, M. I. (1975). Sunan at-Tirmidhi (Hadith Nos. 695, 807). Dar Al-Kutub Al-Ilmiyyah.
12. Bukhari, M. I. (2008). Sahih al-Bukhari. Darussalam Publishers.
13. Dr. Nusair . etPd kUj;Jtj;jpy; rpfpr;ir KiwahFk; Nehd;G. Vidivelli.lk, 22 Feb. 2025, www.vidivelli.lk/article/18620. Accessed 23 Mar. 2025.
14. Ibn Hajar al-Asqalani. (1998). Tabyin al Ajab bima warada fi Rajab (p. 19). Dar al-Basha'ir al-Islamiyyah.
15. Ibn Khuzaymah, M. I. (1993). Sahih Ibn Khuzaymah (Hadith No. 1887). Al-Maktab Al-Islami.
16. Ibn Majah, M. Y. (2007). Sunan Ibn Majah (Hadith No. 1746). Dar Al-Risalah Al-Alamiyah.
17. Ibrahim, S. (2017). Ramadan: A time for reflection and spiritual growth. Islamic Studies Journal, 35(2), 78-84.
18. Jafar, A. (2019). The importance of Ramadan in the life of a Muslim. International Journal of Islamic Thought, 7(1), 22-30.
19. Kamali, M. H. (2008). The Islamic Law of Zakat and Fasting. Islamic Foundation.
20. Muslim, M. H. (2001). Sahih Muslim (Hadith No. 1098). Dar Ihya Al-Turath Al-Arabi.
21. Muslim, M. H. (2001). Sahih Muslim (Hadith No. 2308). Dar Ihya Al-Turath Al-Arabi.
22. Saeed, A. (2015). Islamic Fundamentalism: A Socio-Political Analysis. Oxford University Press.

## நேர்காணல்கள்

1. மீராலெப்பை அப்துல் ஹக்கீம் (2025.02.18), அட்டாளைச்சேனை - அம்பாறை மாவட்டம்.
2. மகுமுதுலெப்பை சித்தி றஜீனா (2025.02.22), பாலமுனை - அம்பாறை மாவட்டம்.
3. நாகூர்தம்பி முஹம்மட் அத்னான் (2025.02.25), அக்கரைப் பற்று- அம்பாறை மாவட்டம்.
4. அஹமட்லெப்பை முஹம்மது றனீஸ் (2025.02.28), பாலமுனை - அம்பாறை மாவட்டம்.
5. அப்துல் லத்தீப் ஹுஸாம் (ஆசிரியர்) (2025.02.28) பாலமுனை - அம்பாறை மாவட்டம்.
6. மர்யம்கண்டு சிமிலத்தும்மா (2025.03.02), சம்மாந்துறை - அம்பாறை மாவட்டம்.
7. தாவுத்லெப்பை அம்ரி அஹமட் (2025.03.02), சம்மாந்துறை- அம்பாறை மாவட்டம்.
8. நைனா முஹம்மது ஹாரீஸ் (2025.03.04), மாவடிப்பள்ளி - அம்பாறை மாவட்டம்.
9. சஹாப்தீன் அஷ்ரிப் அஹமட் (2025.03.10), ஏறாவுர் - மட்டகளப்பு மாவட்டம்.
10. அலாவுதீன் முஹம்மட் றிப்தி (2025.03.10), ஏறாவுர் - மட்டகளப்பு மாவட்டம்.
11. ஹைதர் அலி பஹாத் (2025.03.15), செம்மனோடை- வாழைச்சேனை - மட்டகளப்பு மாவட்டம்.
12. அப்துல் அன்சார் (ஆசிரியர்) 2025.03.20 - ஜும்ஆ பள்ளிவாயல் (தலைவர்) - பாலமுனை.
13. அமீர் சனா அஹமட் (2025.03.17), வாழைச்சேனை - மட்டக்களப்பு மாவட்டம்.